2. வினாக்கள்— விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள்.

வினா எண் 401, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

முற்பகல் 10-30

401—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் வறட்சி காரணமாக குடிதண்ணீர் பற்றாக்குறை.

*17012—டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியின் காரணமாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏற்பட்ட குடிதண்ணீர் பற்றாக் குறையைப் போக்க அரசு ஒதுக்கீடு செய்த தொகை எவ்வளவு?

(ஆ) எவ்வளவு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏற்பட்ட குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க பல்வேறு திட்டப்பணிகளுக்காக ரூ. 162.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அதில் 371 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் வறட்சியின்போது ஒரு சில இடங்களில் மழை பெய்தும் ஒரு சில இடங்களில் மழை பொய்த்த சூழ்நிலை இருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் கோவை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கோவை மாவட்ட அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர் களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க நமது மாண்புமிகு தமிழக முதல்வரவர்களும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் ரூ. 162.75 இலட்சம் ஒதுக்கி அந்த ஏழை மக்களைக் காப்பாற்றிய தற்காக தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோலவே, 371 ஆழ்துளைக் கிணறுகள் போட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது நிலத்தடி நீர் மிகக் குறைந்திருக்கிற சூழ்நிலையில் அவிநாசி, பல்லடம் போன்ற தொகுதிகளிலே நீர் ஆதாரம் எதுவுமே இல்லாது இருக்கிற காரணத்தினால், அங்கு ஆழ்துளைக் கிணறு கள் சுமார் 300 அடிக்குப் போட்டாலும்கூட, தண்ணீர் வருவது மிகவும் கஷ்டமாக இருக்கின்ற சூழ்நிலையில் அந்த மாதிரி

இருக்கின்ற இடங்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்கிற அடிப்படையில், மழை பெய்த வட்டங்களுக்குக் குறைவாகவும், மழை இல்லாத அவிநாசி போன்ற தொகுதிக்குக் கொஞ்சம் அதிகமாகவும் ஒதுக்கித்தந்து உதவிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லுகிறபொழுது ரூ. 162.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று அறிவித்தேன். அது மாவட்டத்திற்கான வறட்சிப் பணிகளுக்கு என்று ஒதுக்கப்பட்டாலும், எந்த எந்தப் பகுதியில் அதிகமாக வறட்சி இருக்கிறதோ, வறட்சிப் பணிகளுக்காகப் பணம் ஒதுக்கித் தருகின்றபொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதை நடைமுறைப்படுத்துகிறபொழுது எந்த எந்தப் பகுதிகள் வறட்சியால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கேற்றவாறு பணத்தை ஒதுக்கி நடைமுறைப்படுத்துவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. சினியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது தொகுதியின் பக்கம் கிராமங்களில் சுற்றிவந்தபொழுது நிலத்தடி நீர் உண்மையிலேயே மிகவும் ஆழமாகப் போய்விட்ட காரணத்தால் அவிநாசி தொகுதி மக்களின் நிலையை கருத்தில் கொண்டு, எனது அவிநாசி தொகுதி பின்தங்கிய வட்டத்திற்கு, மீண்டும் ஆழ்துளைக் கிணறுகளை அதிகமாக ஒதுக்கித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி வட்டத்தில் எந்த அளவுக்கு நிலத்தடி நீர் கீழே போய் இருக்கிறதோ அந்த அளவுக்கு ஆழ் துளைக் கிணறுகள் போடப்படும் என்பதையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அதைக் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. எஸ். துரை முருகன்.

திரு. கே. எஸ். துரை முருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் தற்சமயம் பல்லடம் தொகுதி, அவிநாசி தொகுதி, திருப்பூர் தொகுதி போன்ற இடங்களில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவி வருகிறது. அந்தப் பகுதிகளில் எல்லாம் ஆழ்துளைக் கிணறுகள் போட்டாலும்கூட நிலத்தடி நீர் இல்லாத காரணத்தினால் ஆழ் துளைக் கிணறுகள் முழுவதும் வெற்றியடையும் வாய்ப்பு

1993 ஏப்ரல் 21]

குறைவாக இருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையை மனதில் கொண்டு மக்களின் குடிநீர்ப்பிரச்சினையைப் போக்க தற்சமயம் P.A.P. வாய்க்காலிலே தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது, அதிலே குடிநீருக்காக, திருப்பூர், பல்லடம் அவிநாசி போன்ற பகுதிகளில் உள்ள குட்டைகளில் நிரப்பிக்கொடுத்தால் குறைந்த பட்சம் இரண்டு மாத காலத்திற்காவது அந்த ஜனங்கள் எல்லோருக்கும் குடிநீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அரசு, சம்பந்தப்பட்ட துறை மூலம் இதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ம ஆற்றிலே தண்ணீர் வந்தால் அங்கே ஊற்று அதிகமாக வரும், நிலத்தடி நீர் கீழே இருந்தால் மேலே வரும் என்பதையும், அதே நேரத்தில் எங்கே ஆழ்துளைக் கிணறுகள் இல்லையோ அந்தப் பகுதிகளுக்கு லாரிகள் மூலம் தண்ணீர் கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் மாவட்டங்கள் பாதிக்கப்படுகின்ற பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரால் அணாவாரி சான்றிதழ் வழங்கப்படும். அந்த வகையிலே 1991–92 ஆம் ஆண்டில் மிகக் கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த கோவை மாவட்டத்திற்கு அந்த மாதிரி அணாவாரி சான்றிதழ் மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான போது, அணாவாரி சர்ட்டிபிக்கேட் கொடுக்கப்படும். அணாவாரி சர்ட்டிபிக்கேட் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் பொதுவாக எந்தெந்தப் பகுதியில், எந்தெந்த கிராமத்தில் அங்கே வறட்சி ஏற்பட்டிருக்கிறது, அங்கே போடப்பட்ட பொருள்கள் நன்றாக விளையவில்லை, விவசாயம் இல்லை, அதற்காகத் தண்ணீர் தீர்வையைத் தள்ளித் தரவேண்டும், நிலவரியைத் தள்ளித் தரவேண்டும் என்று அவர்கள் சிபாரிசு செய்தால், அதை இந்த அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 402. திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சிங்கை கோவிந்தராசு கேட்கிறார். மாண்புமிகு கல்வி அமைச்சர்.